# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.07.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல்

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**நீதிமன்ற அவமதிப்புகளைத் தண்டிப்பதற்கான சில நீதிமன்றங்களின் அதிகாரங்களை வரையறுத்துக் கட்டுப்படுத்துவதற்கும், அது தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்குமானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல்

### நீதிமன்ற அவமதிப்புகளைத் தண்டிப்பதற்கான சில நீதிமன்றங்களின் அதிகாரங்களை வரையறுத்துக் கட்டுப்படுத்துவதற்கும், அது தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப்பெயர்**

***1***. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, நீதிமன்றங்களை அவமதிப்புச் செய்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**வரைவிலக்கணம்**

***2***. வேறு சந்தர்ப்பத்தில் தேவைப்படாதவரை, இச்சட்டத்தில்,

(அ) "நீதிமன்ற அவமதிப்பு" என்பது குடியியல் அவமதிப்பு அல்லது குற்றவியல் அவமதிப்பு என்று பொருள்படும்;

(ஆ) ''சிவில் அவமதிப்பு'' என்பது ஒரு நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்புக்கோ, தீர்வைக்கோ, கட்டளைக்கோ, ஒழுங்குவிதிக்கோ, பேராணைக்கோ அல்லது நீதிமன்றத்தின் பிற செயல்முறைக்கோ உளக் கருத்துடன் கீழ்படியாமை அல்லது ஒரு நீதிமன்றத்திற்கு வழங்கிய வாக்குறுதியை உளக்கருத்துடன் மீறல் என்று பொருள்படும்;

(இ) ''குற்றவியல் அவமதிப்பு'' என்பது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயத்தை (வார்த்தைகள், பேச்சுக்கள் அல்லது எழுத்துக்கள் அல்லது சமிக்ஞைகள் அல்லது வெளிப்படையான பிரதிநிதித்துவங்கள் அல்லது வேறுவிதமாக) தெரிவித்தல் அல்லது வேறு ஏதேனும் செயல்களினால் வெளிப்படுத்தல் என்பதாகும்.

(i) எந்தவொரு நீதிமன்றத்தையும் அபகீர்திக்கு உள்ளாக்குதல் அல்லது அபகீர்த்திக்கு உள்ளாக்குவதற்கு முனைதல் அல்லது அதன் மதிப்பைக் குறைத்தல் அல்லது மதிப்பைக் குறைப்பதற்கு முனைதல்; அல்லது

(ii) நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் அல்லது தலையிடல் அல்லது தலையிட முனைதல் ; அல்லது

(iii) நீதி பரிபாலனத்தில் வேறுவிதிமாக தலையிடல் அல்லது தலையிட முனைதல் அல்லது இடையூறு செய்தல் அல்லது இடையூறு செய்யமுனைதல்.

குற்றமற்ற வெளியீடு மற்றும் விநியோகம் என்பது நீதிமன்ற அவமதிப்பு இல்லை

**3.** (1) எந்த நேரத்திலும் நிலுவையில் உள்ள சிவில் அல்லது குற்றவியல் வழக்கு தொடர்பாக நீதியின் போக்கை, அந்த நேரத்தில் வழக்கொன்று நிலுவையில் உள்ளது என்று நம்புவதற்கு எந்த நியாயமான காரணமும் இல்லை என்றால், ஒரு நபர் அவர் வெளியிட்ட (வார்த்தைகள்மூலம் அல்லது எழுத்துமூலம் அல்லது அடையாளங்கள்மூலம் அல்லது வேறுவிதமாக) எந்த ஒரு விடயத்திலும், குறுக்கிடல் அல்லது குறுக்கிடமுனைதல் அல்லது தடை ஏற்படுத்தல் தடை ஏற்படுத்த முனைதல் என்பது குற்றமற்ற விடயமாகும் அது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படாது.

(2) இந்த சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் அமுலில் உள்ள சட்டத்தில் இதற்கு முரணாக எவ்வாறு குறிப்பிட்டிருந்தாலும்கூட, வெளியீடு நேரத்தில் நிலுவையில் இல்லாத குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கை தொடர்பாக உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் விடயம் வெளியிடப்படுவது நீதிமன்றத்தை அவமதிப்பு செய்ததாக கருதப்படுதல் கூடாது.

(3) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் ஒரு விடயத்தைக் கொண்ட வெளியீட்டை விநியோகித்ததன் அடிப்படையில், விநியோகித்த நேரத்தில், அது உள்ளடக்கப்பட்டதா அல்லது மேலே கூறப்பட்ட ஏதேனும் விடயத்தைக் கொண்டிருக்கக் கூடியதாக இருக்கலாம் என நம்புவதற்கு; நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை எனில்; ஒரு நபர் நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகக் கூடாது –

எனினும் இச்சட்டத்தின் உட்பிரிவானது பின்வரும் பகிர்ந்தளிப்பு தொடர்பாகப் பொருந்தாது:-

(i) அமுலில் உள்ள சட்டவிதிகளுக்கு இணங்காமல் அச்சிடப்பட்ட அல்லது பதிப்பிக்கப்பட்ட புத்தகம் அல்லது ஏடு எதுவும்;

(ii) அமுலில் உள்ள சட்டத்தில் உள்ள விதிகளுக்கு இணங்காமல் வேறுவிதிமாக வெளியிடப்பட்ட ஒரு செய்தித்தாளாக இருக்கும் ஏதேனும் வெளியீடு.

விளக்கம் : இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, யாதேனும் நீதிமுறை நடவடிக்கைகள் -

(அ) நிலுவையில் இருப்பதாக கருதவேண்டிய சந்தர்ப்பங்கள்–

(1) குடியியல் வழக்கில், அது ஒரு பிராதுமூலம் அல்லது வேறொரு முறையில் தொடங்கப்படும்போது,

(2) குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான ஒரு குற்றவியல் வழக்கில் -

(i) குற்றச்செயலொன்றை புரிந்ததுடன் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்போது அல்லது நீதிமன்றம் வழக்கொன்றுக்கான அழைப்பாணை அல்லது பிடியாணை பிறப்பிக்கும்போது, மற்றும்

(ii) வேறு யாதேனுமொரு சந்தர்ப்பத்தில், வழக்கு நடவடிக்கையுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத்தின் கவனத்திற்குட்படும் சந்தர்ப்பத்தில், மற்றும்

குடியியல் அல்லது குற்றவியல் வழக்கின்போது, அது விசாரிக்கப்பட்டு இறுதியில் முடிவுசெய்யப்படும் வரை தொடர்ந்து நிலுவையில் இருப்பதாகக்

கருதப்படும். அதாவது மேன்முறையீடு அல்லது திருத்த விசாரணை மேற்கொண்டு இறுதியாக முடிவுசெய்யப்படும் வரை அல்லது அத்தகைய மேன்முறையீட்டை அல்லது திருத்தத்தை எதிர்பார்க்காவிட்டால், மேன்முறையீட்டுக்காக அல்லது திருத்தத்திற்காக பரிந்துரைத்த காலம் நிறைவடையும்வரை அது தொடர்ந்து நிலுவையில் இருப்பதாகக் கருதப்படும்.

(ஆ) விசாரணை செய்யப்பட்டு இறுதியாக முடிவு செய்யப்பட்ட வழக்கொன்றின் ஆணை, கட்டளை அல்லது தண்டனை நிறைவேற்றப்படாமல் இருப்பதன் காரணமாக அவ்வழக்கு தொடர்ந்து நிலுவையில் இருப்பதாகக் கருதப்படக் கூடாது.

*நீதிமன்ற நடவடிக்கை பற்றிய நியாயமான, துல்லியமான அறிக்கை யிடலானது அவமதிப்பு அல்ல*

**4.** ஏழாம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, ஒரு நபர் நீதி விசாரணை அல்லது அதன் நிலைபற்றிய நியாயமான, துல்லியமான அறிக்கையை வெளியிட்டமையானது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படக்கூடாது.

*நீதித்துறையின் மீதான நியாயமான விமர்சனம் அவமதிப்பு அல்ல*

**5.** ஒரு நபர், விசாரணை செய்யப்பட்டு இறுதியாக முடிவுசெய்யப்பட்ட யாதேனுமொரு வழக்கின் தகுதிகள் குறித்து நியாயமான கருத்தை வெளியிட்டமையானது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படக்கூடாது.

*கீழ்நிலை நீதிமன்றங்களின் தலைமை அலுவலருக்கு எதிராக முறைப்பாடு செய்வது அவமதிப்பு அல்ல*

**6.** ஒரு நபர், நீதிமன்ற தலைமை அதிகாரியின் மீது நல்லெண்ணம்கொண்டு கூறிய விடயங்களுக்கு அந்நபருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றமிழைத்ததாக கருதப்படக்கூடாது.

விளக்கம்: இப்பிரிவில், "கீழ்நிலை நீதிமன்றம்" என்பது நீதி சேவை ஆணைக்குழுவின் பரப்பெல்லைக்குட்பட்ட எந்த நீதிமன்றத்தையும் குறிக்கும்.

*நீதிமன்ற அறையில் இரகசியமாக இடம்பெறும் நீதிமன்ற நடவடிக்கை களுடன் தொடர்புடைய தகவல்களை வெளியிடல் சில சந்தர்ப்பங்களில் தவிர நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படாது*

**7**. (1) இச்சட்டத்தில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், பின்வரும் வழக்குகளில் தவிர, எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது இரகசியமாக இடம்பெறும் நீதி விசாரணை பற்றிய நியாயமான மற்றும் துல்லியமான அறிக்கையை வெளியிட்டதற்காக ஒரு நபர் நீதிமன்ற அவமதிப்பு செய்ததாகக் கருதப்படாது.

(அ) தற்போது அமுலில் உள்ள ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக வெளியீடுகள் இருக்கும்போது;

(ஆ) பொது கொள்கையின் அடிப்படையில் அல்லது அதில் உள்ள ஏதேனும் அதிகாரத்தை நீதிமன்றம் பிரயோகிப்பதில், வெளியிடப்பட்டுள்ள விளக்கம் அல்லது தகவல் தொடர்பான அனைத்து தகவல் களையும் வெளியிடுவதை வெளிப்படையாக தடை செய்யும்போது;

(இ) பொது ஒழுங்கு அல்லது அரசின் பாதுகாப்பு தொடர்பான காரணங்களுக்காக, நீதிமன்ற அறைகள் அல்லது இரகசியமாக இடம்பெறும் வழக்கு விசாரணையின்போது, அந்த நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை வெளியிடுதல்.

(ஈ) வழக்கு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தகவல்கள் ஒரு இரகசிய செயல்முறை, கண்டுபிடிப்பு அல்லது புதிய கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய சந்தர்ப்பங்களில்,

(2) உட்பிரிவு (1) இல் உள்ள ஏற்பாடுகளுக்கு பாரபட்சம் காட்டாமல், ஒரு நபர், பொதுகொள்கையின் அடிப்படையில் வெளிப்படையாக அதை வெளியிடுவதற்கு நீதிமன்றம் தடைவிதித்தாலொழிய, நீதிமன்றமானது, ஒரு நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்ட ஆணையின் முழு அல்லது ஒரு பகுதி அல்லது ஒரு நியாயமான மற்றும் துல்லியமான சுருக்கத்தை வெளியிடுவதற்காக நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகக் கூடாது அல்லது பொது ஒழுங்கு அல்லது அரசின் பாதுகாப்புடன் தொடர்புடைய காரணங்களுக்காக அல்லது ஒரு இரகசிய நீதிமன்ற விசாரணை செயல்முறை, கண்டுபிடிப்பு அல்லது புதிய கண்டுபிடிப்பு தொடர்பான தகவல்களைக் கொண்டிருக்கிறது என்ற அடிப்படையில் அல்லது அதில் உள்ள எந்த அதிகாரத்தையும் பயன்படுத்துவதில்.

*பாதிக்கப்படாத பிற பாதுகாப்புகள்*

**8**. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளவை எதுவும் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகளின்போது, இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் காரணமாக மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருக்கும் வேறெந்த பாதுகாப்பும், நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகளிலும் செல்லுபடியான பாதுகாப்பு வழிமுறையாக இருந்திருக்கக் கூடியதாகக் கருதப்படலாகாது.

*நீதிமன்ற அவமதிப்பின் பரப்பு எல்லையை விரிவாக்க இச்சட்டம் பயன்படாது*

**9**. கீழ்ப்படியாமை, மீறல், வெளியீடு அல்லது பிற செயல்கள், இந்தச் சட்டத்திலிருந்து இவ்வளவு தண்டனைக்குரியதாக இல்லாத நீதிமன்ற அவமதிப்பு எனவும் தண்டனைக்குரியதாகக் கருதப்படலாம்.

*கீழ்நிலை நீதிமன்ற அவமதிப்புகளைத் தண்டிப்பதற்கான மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு காணப்படும் அதிகாரம்*

**10**. மேன்முறையீட்டு நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்புகளை தண்டிப்பதற்கான அதிகாரத்தையும், தனக்குக் கீழ்ப்பட்ட நீதிமன்ற அவமதிப்புக்களையும், மேன்முறையீட்டு நீதிமன்ற அவமதிப்புகளுக்கு தண்டனை வழங்க பிரயோகிக்கும் அதிகாரங்களையும் கொண்டு செயல்படுத்துதல் வேண்டும்.

*அதிகார வரம்பிற்கு வெளியே உள்ள குற்றங்களை அல்லது குற்றவாளிகள் மீது விசாரணை செய்வதற்கான மேன்முறையீட்டு நீதிமன்த்தின் அதிகாரம்*

**11**. மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட எல்லைகளுக்குள் அல்லது அதற்கு வெளியே அவமதிப்பு இழைக்கப்பட்டது என்று கூறப்படும் நீதிமன்றமானது அல்லது அவமதிப்பு செய்ததாகக் கூறப்படும் நபர் அத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டதா அல்லது அதற்கு உட்பட்டுள்ளதா என்பதை விசாரிக்க அல்லது விசாரணை செய்ய அல்லது அதற்கு சார்ந்த ஏதேனும் நீதிமன்றத்தை விசாரிக்க அல்லது விசாரிக்க அதிகாரம் பெற்றதாக இருத்தல் வேண்டும்.

*நீதிமன்ற அவமதிப்புக்கான தண்டனை*

**12**. (1) இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் தண்டனை வெளிப்படையாகக் கொடுக்கப்பட்டுள்ள, நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்கு ஆறு (06) மாத காலம் வரை நீடிக்கக்கூடிய சாதாரண சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபா வரை தண்டப்பணம் விதித்தல் அல்லது இவ்விரண்டையும் விதிக்கலாம்:

இந்நிபந்தனைக்கு உட்பட்டு குற்றம்சாட்டப்பட்டவர் விடுவிக்கப் பட்டு அல்லது வழங்கப்பட்ட தண்டனை, நீதிமன்றத்தின் திருப்திக்கு உரிய மன்னிப்புப் பெறப்படுவதற்காக அனுப்பப்படலாம்.

விளக்கம்: *குற்றம்சாட்டப்பட்டவர் செய்த குற்றத்திற்கு நல்ல எண்ணத்துடன் மன்னிப்புகோரும்போது அச்செயல் உண்மை என்ற அடிப்படையில் மன்னிப்பு நிராகரிக்கப்படக்கூடாது.*

*(2) தற்போதைக்கு அமுலில் உள்ள சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், எந்த நீதிமன்றமும் தனக்கு அல்லது கீழ் நீதிமன்றம் ஒன்று தொடர்பாக ஏதேனும் அவமதிப்புக்கு, உட்பிரிவு (1) இல் குறித்துரைக்கப்பட்டதை தவிர அதிகமான தண்டனை விதிக்கக் கூடாது.*

*(3) இந்தப் பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும்கூட, நபர் ஒருவர் ஒரு சிவில் அவமதிப்பு குற்றவாளி என்று கண்டறியப்பட்டால், நீதிமன்றம், அந்நபருக்கு அபராதம் விதிப்பது மாத்திரம் நீதியை நிலைநாட்ட போதுமானதாக அமையாது சிறைத்தண்டனையும் வழங்க வேண்டும் என்று கருதினால், அந்நபருக்கு சாதாரண சிறைத்தண்டனைக்குப் பதிலாக, நீதிமன்றம் பொருத்தம் எனக் கருதுகின்ற வகையில் ஆறு மாதங்களுக்கு மேற்படாமல் சிவில் சிறையில் அவரை காவலில் இருக்க வேண்டும் என்று உத்தரவிடலாம்.*

*(4) நீதிமன்றத்திற்கு வழங்கிய யாதேனும் வாக்குறுதியுடன் தொடர்புடையதாக நீதிமன்ற அவமதிப்புக்கு ஆளாகும் நபர் ஒரு நிறுவனம் எனின், அவமதிப்பு செய்யப்பட்டபோது, குறித்த நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய மற்றும் அந்நிறுவனத்தில் அதிகாரமுடையவர்களாக இருந்த அனைத்து நபர்களும், அந்நிறுவனமும், நீதிமன்ற அவமதிப்பு செய்தவர்களாக கருதப்படுவதுடன் நீதிமன்ற அனுமதியுடன், அத்தகைய ஒவ்வொரு நபரையும் சிவில் காவலில் தடுத்துவைத்து தண்டனையை நிறைவேற்றலாம்:*

*இந்த உட்பிரிவுகளில் உள்ள எதுவும், அவமதிப்பு ஒருவரால் அவர் அறியாமல் இழைக்கப்பட்டது அல்லது அதன் ஆணைத்தைத் தடுக்க அவர் முழு முயற்சியும் செய்தார் என்று நிரூபித்தால், அத்தகைய தண்டனைக்கு அத்தகைய நபர் நீதிமன்ற அவமதிப்பு செய்தால் பொறுப்புக் கூறமுடியாது.*

(5) உட்பிரிவு (4) இல் உள்ள அனைத்தும் இருந்தாலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு, ஒரு நிறுவனத்தால் இழைக்கப்பட்டு, அந்த அவமதிப்பு, அந்த நிறுவனத்தின் ஒப்புதலுடன் அல்லது இணக்கத்துடன் இழைக்கப்பட்டது என்பது நிரூபித்தால் அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது நிறுவனத்தின் பிற அதிகாரி எவரேனும் புறக்கணிப்பின் காரணமாக நடைபெற்றது என்றால், அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர் செயலாளர் அல்லது வேறு அதிகாரியும் அவமதிப்புக்கு குற்றவாளி என கருதப்படலாம் மற்றும் அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது மற்ற அதிகாரிக்கு நீதிமன்ற அனுமதியுடன், சிவில் சிறையில் காவல்மூலம் தண்டனை அமுலாக்கப்படலாம்.

விளக்கம் - பிரிவு (4) மற்றும் (5)இற்கான விளக்கம்

(அ) "நிறுவனம்" என்பது கூட்டிணைக்கப்பட்ட எந்தவொரு நிறுவனமும் அல்லது தனிநபர்களின் நிறுவனம் அல்லது பிற கூட்டு நிறுவனத்தையும் உள்ளடக்கியது;

(ஆ) "பணிப்பாளர்" என்பது ஒரு நிறுவனத்தைப் பொறுத்தவரை, நிறுவனத்தின் ஒரு பங்காளி என்று பொருள்படும்.

*சில வழக்குகளில் அவமதிப்புகள் தண்டிக்கப்படக் கூடியவை அல்ல*

**13.** தற்போதைக்கு அமுலில் உள்ள எந்த சட்டத்திலும் உள்ளவை எதுவாக இருந்தாலும்,

(அ) இந்த சட்டத்தின்கீழ் நீதிமன்ற அவமதிப்பு தண்டனை ஒரு நீதிமன்ற அவமதிப்பு ஏற்பட்டது என்று திருப்திப்பட்டாலே ஒழிய தண்டனை விதிக்கப்படக் கூடாது;

(ஆ) நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, அது பொதுநலனிற்காக நீதிமன்றம் கோருதல் என்று திருப்திப்பட்டால், நீதிமன்றம் அவ்வழக்கின் உண்மையை நியாயப்படுத்த அனுமதிக்கலாம்.

மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் அவமதிப்பு வழக்குக்காக காணப்படும் நடைமுறை

**14.** (1) ஒரு நபர் தனது முன் அல்லது விசாரணையின்போது அவமதிப்புச் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குத் தோன்றும்போது, நீதிமன்றம் அத்தகைய நபரை நீதிமன்றம் அதேநாளில் அல்லது அதன் பிறகு கூடிய விரைவில், எந்த நேரத்திலும் காவலில் வைக்க வேண்டும்–

(அ) அவர்மீது சுமத்தப்பட்டுள்ள அவமதிப்பு குறித்து எழுத்துமூலம் அவருக்கு அறிவித்தல்;

(ஆ) தன்பக்க நியாயத்தை சொல்ல அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கல்;

(இ) நீதிமன்றத்திற்கு தேவைப்படும் சாட்சி அல்லது அத்தகைய நபரிடம் சாட்சியம் எடுத்த பிறகு மற்றும் அத்தகைய நபரை செவிமடுத்த பிறகு உடனே அல்லது ஒத்திவைத்த பிறகு, குற்றச்சாட்டு விடயத்தை தீர்மானிக்க; மற்றும்

(ஈ) அத்தகைய நபருக்கு நியாயமான தண்டனை வழங்க அல்லது குற்றமற்றவர் என விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(2) உட்பிரிவு (1)இல் உள்ள ஏதேனும் விடயத்தை, அந்த துணைப் பிரிவின் கீழ் அவமதிப்புக் குற்றம்சாட்டப்பட்ட ஒரு நபர், வாய்மூலமாகவோ, எழுத்துபூர்வமாகவோ குற்றம் இழைக்கப் பட்டதாகக் கூறும் நீதிபதி அல்லது நீதிபதிகள் அல்லாத வேறு நீதிபதியால் தாம் விசாரிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தால் மேலும் நீதிமன்றம் அவ்வாறு செய்வது நடைமுறை சாத்தியமானது மற்றும் நீதிபரிபாலனத்தின் நலனிற்காக, அந்த பிராது அனுமதிக்கப்பட வேண்டும் என கருதினால், வழக்குடன் தொடர்புடைய அறிக்கையை பொருத்தமான கட்டளையொன்றை பிறப்பிப்பதற்காக பிரதம நீதியரசர் முன் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) வேறு சட்டத்தில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், உப பிரிவு (1)இன் கீழ் நீதிமன்ற அவமதிப்பு குற்றம்சாட்டப்பட்ட ஒரு நபரின் வழக்கு விசாரணைக்காக உப பிரிவு (2)இன் பிரகாரம் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதாகக் கூறும் நீதிபதி அல்லது நீதிபதிகளுக்கு முன் விசாரணை நடைபெறாமல் வேறொரு நீதிபதி அல்லது நீதிபதிகளுக்கு முன் விசாரணை இடம்பெறும் எனில், அவமதிப்பு நிகழ்ந்தது தம் முன்னர் எனக் கூறும் நீதிபதியோ அல்லது நீதிபதிகளோ சாட்சியாளர்களாக நீதிமன்றத்தில் தோற்றவேண்டிய அவசியமில்லை என்பதுடன் மேலுள்ள உப பிரிவு (2)இற்கு அமைவாக பிரதம நீதியரசருக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையானது வழக்கின் சாட்சியமாக கருதப்பட வேண்டும்.

(4) குற்றச்சாட்டு தீர்மானிக்கப்படும் வரை, இந்த பிரிவின்கீழ் அவமதிப்பு குற்றம்சாட்டப்பட்ட ஒரு நபர் குறித்த வழக்கு விசாரணை முடியும் வரை, அந்நபர் காவலில் இருக்க வேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிடலாம்:

நீதிமன்றம் பொருத்தமானது எனக் கருதும் தொகைக்கு பிணையாளியுடனோ அல்லது பிணையாளியின்றியோ பிணையில் செல்ல அனுமதிக்கலாம். குற்றஞ்சாட்டப்பட்ட நபர் பிணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு வரவேண்டும் என்று நிபந்தனைக்குட்பட்டிருந்தால், நீதிமன்றத்தினால் வேறுவிதமாக கட்டளை பிறப்பிக்கப்படும்வரை அவர் தொடர்ந்தும் தோன்ற வேண்டும் என்பதுடன் அக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகிய நபர் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிணையில் விடுவிக்கப்படலாம்.

நீதவான், நீதிபதி அல்லது நீதித்துறையில் செயல்படும் பிறநபர்களால் அவமதிப்பு

**15.** (1) தற்போதைக்கு அமுலில் உள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, நீதிபதி, நீதவான் அல்லது நீதித்துறையில் செயல்படும் வேறு நபர், வேறு எந்த தனிநபரைப் போலவே, தனது நீதிமன்றத்தை அல்லது வேறு எந்த நீதிமன்றத்தையும் அவமதிப்பு செய்த குற்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளும் ஏற்புடையதாயிருக்கும்.

(2) கீழ்நிலை நீதிமன்றத்தின் ஆணை அல்லது தீர்ப்புக்கு எதிராக அத்தகைய நீதிபதி அல்லது பிற நபர் முன் நிலுவையில் உள்ள ஒரு மேன்முறையீடு அல்லது மறுசீராய்வுடன் தொடர்புடையதாக ஒரு நீதிபதியின் அல்லது நீதித்துறையில் செயல்படும் வேறு நபரின் அவதானிப்புக்கள் அல்லது கருத்துக்கள் எதுவும் இந்த பிரிவில் உள்ளவற்றுடன் பொருந்தாது.

*அவமதிப்பை அடையாளம் கண்டறிந்த பின்னரான நடைமுறை* (cognizance)

**16.** (1) பிரிவின் 14 இன்கீழ், நீதிமன்றம் பதிவுசெய்யப்பட வேண்டிய காரணங்களுக்கு தவிர ஒவ்வொரு நடவடிக்கை பற்றியும் குற்றம் சாட்டப்பட்ட நபர்மீது தனிப்பட்ட முறையில் அறிவித்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

(2) அவ்வாறான அறிவிப்புடன் இணைக்கவேண்டிய ஆவணங்கள்,-

(அ) நடவடிக்கை ஒரு நகர்த்தல் பத்திரத்தின்மூலம் நடைபெறும்போது, அத்தகைய நகர்த்தல் பத்திரத்தின் பிரதி, சத்தியக்கடதாசிகளின் பிரதிகள்; மற்றும்

(ஆ) வழக்கு நடவடிக்கைகளின்கீழ் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் எனின், கீழ்நிலை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரதியும்.

(3) பிரிவு 14 இன்கீழ் குற்றம்சாட்டப்பட்ட ஒரு நபர், அறிவித்தல் சேவையைத் தவிர்ப்பதற்கு அல்லது புறக்கணிப்பதற்கு இடமுண்டு என நீதிமன்றம் திருப்தியடைந்தால், நீதிமன்றம் நியாயமானதென கருதும் வகையில் அவரது சொத்தை பறிமுதல் செய்ய உத்தர விடலாம்.

(4) உட்பிரிவு (3) இன்கீழ் ஒவ்வொரு கட்டளையும், குடியியல் நடைமுறைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள முறையில், பணம் செலுத்துவதற்கான ஆணையை நிறைவேற்றுவதற்காக, சொத்தை பறிமுதல் செய்தததை மற்றும் அத்தகைய இணைப்புக்குப் பிறகு,

குற்றம்சாட்டப்பட்ட நபர் நீதிமன்றத்தில் தோன்றி, அவர் தலைமறைவாக இல்லை அல்லது அறிவித்தல் சேவையைத் தவிர்ப்பதற்காக இல்லை என்று நீதிமன்றம் திருப்தியடையும் வகையில் வெளிப்படுத்துவார் என்றால், நீதிமன்றம் அவ்விளக்கம் பொருந்தும் என்று கருதும்போது நிபந்தனைகளின்மீது அவரது சொத்தை விடுவிக்க உத்தரவிட வேண்டும்.

(5) பிரிவு 14 இன் கீழ் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர், அவரது வாதத்திற்கு ஆதரவாக ஒரு சத்தியக்கடதாசியை தாக்கல் செய்யலாம், மேலும் தாக்கல் செய்யப்பட்ட சத்தியக்கடதாசியின்மீது அல்லது தேவையான ஆதாரங்களை எடுத்த பின்னர், நீதிமன்றம் அந்த குற்றச்சாட்டின் விவகாரத்தைத் தீர்மானிக்கலாம், மேலும் வழக்கின் நீதி நலன் கருதி அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

மேன் முறையீடுகள்

**17**. (1) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிமன்ற அவமதிப்பு தண்டனை தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வது உரிமையாக இருக்கும்.

(அ) ஒரு நீதிபதியின் ஆணை அல்லது தீர்ப்பு, இரண்டுக்குக் குறையாத நீதிபதிகள் குழாத்திற்கு;

(ஆ) நீதிபதிகள் குழாமொன்றின் ஆணை அல்லது தீர்ப்பு உயர் நீதிமன்றத்திற்கு;

(2) ஏதேனும் மேல்முறையீடு நிலுவையில் உள்ளபோது, மேன்முறையீட்டு நீதிமன்றமானது பின்வரும் கட்டளைகளை பிறப்பிக்கலாம்:-

(அ) மேன்முறையீடு செய்யப்படும் தண்டனை அல்லது ஆணையின் நிறைவேற்றப்படுவதை இடைநிறுத்துவதற்கு;

(ஆ) மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்தவர் சிறையில் இருந்தால், அவர் பிணையில் விடுவிப்பதற்கு; மற்றும்

(இ) மேன்முறையீடு செய்ததனால் நீதிமன்ற அவமதிப்பு செய்தமை இல்லை என எண்ணலாகாது.

(3) பாதிக்கப்பட்ட நபர் மேன்முறையீடு செய்யமுடியுமான உரிய காரணம் இருப்பதாக உயர்நீதிமன்றம் திருப்திப்படுத்துகின்றவிடத்து அந்த நபர் மேன்முறையிடு செய்யலாம். உயர் நீதிமன்றம், உட்பிரிவு (2) ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் பிரயோகிக்கலாம்.

*அவமதிப்பு நடவடிக்கைகளுக்கான வரம்புகள்*

**18**. நீதிமன்றமானது, அவமதிப்பு செய்ததாகக் கூறப்படும் தேதியிலிருந்து ஓராண்டு காலம் முடிந்த பின்னர் அதன் சொந்த பிரேரணையின் பேரில் அல்லது வேறுவகையில், நீதிமன்றமானது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எதனையும் ஆரம்பிக்கக் கூடாது.

*இச்சட்டம், நீதிமன்ற அவமதிப்புடன் தொடர்புடைய பிற சட்டங்களுக்கு மேலதிகமானதே அன்றி அதனை வலுவிழக்க செய்யாமல் இருக்கவேண்டிய பிரிவை கொண்டுள்ளது*

**19**. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நீதிமன்ற அவமதிப்புடன் தொடர்புடைய வேறு சட்டங்களுக்கு மேலதிகமானவை என்பதுடன் மாறாக அவற்றை வலுவிழக்கச் செய்வதல்ல.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**20**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.